[2018 ஜூன் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அதிகாரிகளுடன் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழக ஆளுநர் மாளிகை செய்தி வெளியிட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் மாளிகையிலிருந்து ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அது குறித்து பத்திரிகைகளிலும் விரிவாக வந்திருக்கின்றன. நான் விரிவாக அதை எடுத்துச் சொல்லி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். இன்றைக்கு ஆங்கில இந்து பத்திரிகையில்கூட ஒரு தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள்;'Raj Bhavan comes out with a legal opinion on powers'என்ற தலைப்பிலே பல செய்திகள் வந்திருக்கின்றன. அதிலே குறிப்பாக, 'Pointing out that there was no illegality in "mere meeting with the district officers," which took place after the Governor had requested Chief Secretary Girija Vaidyanathan and Commissioner of Revenue Administration K. Satyagopal to arrange such a meeting' என்று அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. ஆக, மாவட்டங்களில் அதிகாரிகளுடனான கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தலைமைச் செயலாளரையும், வருவாய் நிருவாக ஆணையரையும் கேட்டுக்கொண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மாநில ஆளுநரின் ஆய்வு குறித்து இதுவரை அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய விளக்கங்களிலோ அல்லது முதலமைச்சருடைய விளக்கத்திலோ ஆளுநர் அவர்கள் அரசிடம் அனுமதி கேட்டுத்தான் இந்தக் கூட்டங்களை நடத்துகிறார் என்ற செய்திகள் இதுவரை வெளிவரவில்லை. ஆனால், ஆளுநர் தலைமைச் செயலாளரிடமே நேரில் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு அனுமதி கேட்டிருக்கிறார் என்பதை மாநில

அரசு ஏன் இதுவரை பொது மக்களுக்கு வெளிப்படுத்தாமல் இருக்கிறது என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சருக்கே தெரியாமல் தலைமைச் செயலாளரும், வருவாய் நிருவாக ஆணையரும் நேரடியாக மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உத்தரவுபடி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களா என்பதை இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு நேரடியாக விடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. எனவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை* raise *செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டபோது, நானும் அந்தப் பத்திரிகையையெல்லாம் வாங்கிப் பார்த்தேன். அதில் ஒன்றும் பெரிய. . .* (குறுக்கீடுகள்) *இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், சாதாரணமாக ஆளுநர் குறித்து வேறு ஏதாவது பேசியிருந்தால் நான் அதை அவைக் குறிப்பில் ஏற்றுவது பற்றி யோசனை செய்திருப்பேன். நீங்கள்* programme *பற்றிதான் கேட்கிறீர்கள். அவர் மேற்கொள்ளும்* tour *பற்றிக் கேட்கிறீர்கள். அவர்* Constitutional Authority-*ஆக இருக்கிறார்.(குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் தலைமைச் செயலாளரையும்,* Commissioner of Revenue Administration-*ஐயும் குறிப்பிட்டுச் சொன்னதனால் சொல்கிறேன். ஆளுநர்,* Constitutional Authority. (குறுக்கீடுகள்) *அவர்களிடம்தான் சொல்ல முடியும். அவர்கள்* arrange *செய்கிறார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கண்டிப்பாக வரும்.* (குறுக்கீடுகள்) ஆகவே, tour செல்வதையெல்லாம் நாம் ஒரு issue ஆக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, *அவர்கள்* tour செல்வதை, *ஆளுநரோ, மற்றவர்களோ* tour *செல்வதற்கு. . .* (குறுக்கீடு) இருங்கள், வருகிறேன். (குறுக்கீடு) இருங்கள், *அதிகாரிகள்,* Chief Secretary, Commissioner of Revenue Administration, Collector போன்றவர்களுக்கு *முறையாகத்* தெரிவிப்பதும், *அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வதும்,* இதுவெல்லாம் காலம் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு *சாதாரண விஷயம்.* ஆகவே, இதை நீங்கள் பதிவு செய்வதோடு நிறுத்திக்கொள்ளலாம். (குறுக்கீடு) மேற்கொண்டும் இதில் விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2 நாட்களுக்கு முன்பு ஆய்வு ஏதும் நடத்தவில்லை என்று ஆளுநர் மாளிகையிலிருந்து செய்தி வருகிறது. இன்று, தலைமைச் செயலாளருக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, ஆய்வு நடத்துகிறோம் என்று செய்தி வருகிறது. அதனால்தான் இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள்.* (குறுக்கீடுகள்) *மகாராஷ்டிரா. . .* (குறுக்கீடுகள்) *இருங்கள், பத்திரிகைகளில் சொல்வதற்கெல்லாம்,* Constitutional. . . (குறுக்கீடுகள்) *அனுமதிப்பது நான்தானே.* (குறுக்கீடுகள்) *இல்லை, உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *பதில் சொல்ல மாண்புமிகு முதலமைச்சரையோ, மாண்புமிகு துணை முதலமைச்சரையோ மற்ற மாண்புமிகு அமைச்சர்களையோ பேச அழைக்க வேண்டுமா என்பதையும் நான்தான் முடிவு செய்ய வேண்டும்.* (குறுக்கீடுகள்) *அதில் என்ன இருக்கிறது?* (குறுக்கீடுகள்) *இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கேட்டவுடனே நான் அனுமதி கொடுத்தேன்.* (குறுக்கீடுகள்) *அவர், அவருடைய கருத்துகளைப் பதிவு செய்துவிட்டார்.* (குறுக்கீடுகள்) *அதற்கு, சாதாரணமான நடைமுறைதான் என்று நான் விளக்கம் சொல்லிவிட்டேன். இந்த விளக்கத்தோடு இதை முடித்துக்கொள்ளலாம்.* (குறுக்கீடுகள்) *ஏனென்று கேட்டீர்களென்றால், மேற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ மற்ற அமைச்சர்களோ பதில் சொல்லி, இதை விவாதப் பொருளாக்க வேண்டாம்.* (குறுக்கீடுகள்) *ஆளுநர் குறித்து. . .* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *இல்லை, மேற்கொண்டு, ஆளுநருடைய சுற்றுப்பயணங்கள் போன்றவற்றை நாம் ஒரு விவாதப் பொருளாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.* (குறுக்கீடுகள்) *ஆகவே, அது* Constitution *பிரகாரம். . .* (குறுக்கீடுகள்) *பிறகு நீங்கள் மேற்கொண்டும் ஆளுநரைக் குறித்துப் பேசினால், நான் அதை அவைக் குறிப்பில் ஏற்றுவது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். சுற்றுப்பயணத்தைப் பொறுத்தவரையில் சாதாரணமாக அதிகாரிகள் அளவிலே நடைபெறுவதுதான். அது சாதாரணமாக நடைபெறுவது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதை ஒரு கேள்வி மாதிரி கேட்டார். நான் அதைப் பதிவு செய்துவிட்டேன். அதோடு அதை விட்டுவிடலாம்.* (குறுக்கீடுகள்) *விட்டுவிடலாம், விட்டுவிடலாம்.* (குறுக்கீடு) *மேற்கொண்டு என்ன, வேறு ஏதாவது கேட்கிறீர்களா?*

2018 ஜூன் 27] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) இதுகூட மகாராஷ்டிராவின் பழைய Advocate General அவர்கள் எழுதிய ஒரு கடிதத்தின் அடிப்படையிலே வந்திருக்கிறது. ஆகவே, இதை நாம் ஒரு issue ஆக்க வேண்டாம். இதை எதிர்க்கட்சித் தலைவர் raise செய்தது, அவருடைய உரிமை. அதற்கு அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பதை யோசனை செய்து, மேற்கொண்டு அவருடைய சுற்றுப்பயணத்தை நாம் விவாதிக்க வேண்டாம் என்று நான் முடிவு செய்துவிட்டேன். மேற்கொண்டு ஆளுநரைப்பற்றிப் பேசி, அவர்கள் பதில் சொல்வது என்பது விவாதப் பொருளாக மாறிவிடும். அந்த விவாதம் ஆளுநரைக் குறித்து வரும். பின்னர், அது பேரவை விதிக்கெல்லாம் போகும் அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) அவர் raise செய்ததோடு முடித்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) அவர் raise பண்ணியதால் நான் அனுமதித்தேன். அதோடு இருக்கட்டும், விட்டுவிடலாம். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) வேறு ஏதாவது சொல்லுங்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11-15

திரு. மு.க. ஸ்டாலின்: வேறு ஒன்றும் இல்லை. இதே பொருள் குறித்துதான் சொல்லப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பொருள் குறித்து ஒன்றும் பேச வேண்டாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னதற்காகத்தான் நான் இதைச் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, அதை நான் சொல்லிவிட வேண்டும் அல்லவா? நான் பதிவு செய்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, அவர்களுடைய அறிக்கையிலே 'arrange such a meeting' என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்த விளக்கத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து எதிர்பார்த்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதற்கும் பதில் சொல்ல தயாராக இல்லாத காரணத்தால், அதனை நாங்கள் கடுமையாகக் கண்டித்து, வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்லியிருப்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருப்பார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) நான் சொல்வதே உங்களுக்குத் திருப்தியளிக்கும் என்று நினைத்துதான் சொன்னேன்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

3. கவன ஈர்ப்பு

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள கடைகளை காலி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு வந்துவிட்டீர்களா, இல்லையா? (குறுக்கீடு) சரி, நீங்கள் இங்கே இருந்தால் நல்லதுதான். (குறுக்கீடு).*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

அதிகாரிகளுடன் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழக ஆளுநர் மாளிகை செய்தி வெளியிட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் திரு. எ.வ. வேலு அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். அவர் பேசட்டும். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரினஸ், என்ன? (குறுக்கீடு) இல்லை. என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு)*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னருடைய விஷயத்தைப்பற்றி நான் சொல்லி விடுகிறேன்.*